# ஹப்புத்தளை நகர சபை
## பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹப்புத்தளை நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட புறச் செயற்பாட்டுக் கட்டிடத்தின் பெறுமதியான ரூபா 56,022,898 தொகையும், ஹப்புத்தளை நகரத்தின் நவீன சந்தையின் மலசல கூடத்தின் பெறுமதி ரூபா 1,001,418 தொகையும், பெறுமதி கணிப்பீடு செய்யப்படாத 21 சொத்துக்களின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) வெளிச் செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் பணத்திற்காக கடன் செலுத்தும் சலுகைக் காலத்தில் செலுத்த வேண்டிய ரூபா 1,706,842 தொகையான வட்டிக்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிச் செயற்பாட்டுக் கட்டிட நிர்மாண வேலையின் இறுதிப் பகுதிக் கொடுப்பனவில் சபையின் பங்களிப்புப் பணமான ரூபா 598,301 தொகைக்காக

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 221,250 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,154,215 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,654,729 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,830 | 1,776 | 2,180 |
| (ii) | வாடகை | 6,808 | 7,283 | 8,670 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 315 | 385 | 92 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஏனைய வருமானம் | 62,795 | 31,606 | 2,721 |

### 2.2.2 வாடகை

---------------------

(அ) முன்னைய ஆண்டுகளின் போது இறைச்சி மற்றும் மீன் கடைகளை வாடகைக்கு எடுத்த வாடகையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 292,167 மற்றும் மீளாய்வாண்டின் போது வாடகைக்குப் பெற்ற வாடகையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 355,291 தொகையான வாடகை என்பன 2013 பெப்ரவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதர் சிறிசேன மாவத்தையில் அமைந்துள்ள சபைக்குரிய கடைகளுக்காக 46 மாதங்கள் தொடக்கம் 176 மாதங்கள் வரையான கால இடைவெளியிலும் ஏனைய கடைகளுக்காக 10 மாதங்கள் தொடக்கம் 68 மாதங்கள் அளவிலான கால இடைவெளியிலும் வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையினை அறவீடு செயற்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாதத்திற்கு ரூபா 150 படியான வாடகைப் பணத்திற்கு வீடொன்றை வைத்துக்கொள்வதற்காக சபைக்குச் சொந்தமான 47 காணித் துண்டுகளை வாடகைக்கும் பெற்ற வாடகையாளர்களிடமிருந்து தொடர்ந்தும் வாடகை செலுத்தாதிருந்த 21 நபர்களிடமிருந்து நிலுவையான வாடகைத் தொகையை அறவிடுவதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சிக்கடை 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2,251,200 தொகைக்கு கேள்வி கோரி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரும் போது ஆகக் குறைந்த கேள்வியாக முன்னைய ஆண்டின் கேள்வித் தொகைக்குப் பதிலாக முன்னைய ஆண்டின் ஆகக் குறைந்த கேள்வியில் 5 சதவீதம் சேர்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,765,830 தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனால் சபை நிதியத்திற்கு ஆகக் குறைந்தது ரூபா 485,370 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் தொடர்பான மதிப்பீட்டாளரின் மூலம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 50,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 644,170 |

**2.3 செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

சபைக்குரிய சாதாரண மதிப்பீடான ரூபா 300,000 தொகையான உரோமானிய வகையைச் சேர்ந்த வீதிச் செப்பனிடுகை 2007 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்று சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2012 திசெம்பர் மாதத்தில் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 240,862 பெறுமதியான நிர்மாணப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 763 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இருப்புப் புத்தகங்களில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு வேலைகளுக்காகவும் விநியோகிக்கப்பட்ட அளவு, எஞ்சிய அளவினை இனங்காணக்கூடிய முறையில் இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. களஞ்சியத்திற்குப் பொருட்களைக் கையேற்கும் பற்றுச்சீட்டுப் புத்தகத்தின் தொடர் இலக்கங்கள் ஒழுங்குமுறையாகப் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் ஒரு தடவையில் பல பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டிருமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**2.5 ஒப்பந்த நிருவாகம்**

**புறச் செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணம்**

பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 56,022,898 தொகையான இக் கட்டிடத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தக்காரரினால் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) சபையினால் 1997 முதல் 2012 வரையான காலத்தில் பல்வேறு தரப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 318,337 தொகை இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான மாடு அறுவைக் கூடத்திற்கான அனுமதிப்பத்திரமும் 2012 ஆம் ஆண்டிற்கான மாடு அனுப்பதற்கான அனுமதிப்பத்திரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிருவாகம்